1969 பிப்ரவரி 25]

Hartal by workers in Coimbatore.

* 68 Q.—Thiru K. VINAYAKAM : will the **Hon.** the **Minister** for Labour be pleased to state—

(*a*) whether a general hartal was conducted in Coimbatore by the workers of Hind Mazdoor Sabha, Communists **and** Swatantra trade unionists on May 11th of 1968; and

(*b*) if so, the reasons therefor and results thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறக்கக் கோரி ஹர்த்தால் நடத்தப்பட்டது. முதலமைச்சர் தொழிற்சங்கப் பிரதிநிதி களுடன் பேச்சுவார்த்தை நடத்தி 27-5-1968-ல் ஒரு ஒப்பந்தத்தை செய்து வைத்தார்.

திரு. கே. விநயகம் : அவர்கள் எந்தக் காரணத்திற்காக இந்த வேலை நிறுத்தத்தைச் செய்தார்கள்? அவர்கள் குறைகள் என்ன? அவர்களின் குறைகள் ஓரளவிற்காவது தீர்க்கப்பட்டிருக் கின்றனவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறக்கவேண்டுமென்பதற்காக அது நடத்தப்பட்டது. முதல் அமைச்சர் அவர்கள் திருச்சி, மற்ற இடங்களில் அவர்களைச் சந்தித்துப் பேசி ஒரு ஒப்பந்தத்தைச் செய்து வைத்திருக்கிறார்கள்.

திரு. கே. விநயகம் : அப்படி ஒரு ஒப்பந்தம் செய்து வைத் திருந்தும் கூட, இன்னும் 25-க்கு மேற்பட்ட பஞ்சாலைகள் திறக்கப் படாமல் இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப் பஞ்சாலைகள் திறக்கப் படாததற்கு முக்கிய காரணம், ஆலைச் சொந்தக்காரர்களுக்கு ஏற்பட்ட பெருத்த நஷ்டம்தான் என்று சொல்லப்படுகிறது. அதற்காக மத்திய அரசாங்கம், இந்த அரசாங்கம் கேட்டுக்கொண்ட தற்கிணங்க, ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அதில் இந்தப் பஞ்சாலைகள் பற்றி விசாரணை நடத்தவேண்டுமென்று கேட்டு, ஒன்பது பஞ்சாலைகள்பற்றி அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள். இரண்டிற்கு சர்க்கார் காரண்டி கொடுத்து கடன் கொடுக்கலாம் என்று செய்யப்பட்டிருக்கிறது. மீதி ஆலைகள் பற்றி பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சமரச ஒப்பந்தம் ஏற்பட்ட தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த சமரச ஒப்பந்தம் என்ன? அது நடைமுறையில் வந்ததா? இல்லையென்றால் அதற்கான காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தக் கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களின் நிலை, பஞ்சாலைகளின் நிலை இவைகள் எல்லாம் பற்றி தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள், மாநில அரசு அனைவரும் ஒருங்கு கூடி பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

ஆகவே மீண்டும் மீண்டும் அதைப் பற்றிய பிரச்சனைகளை இப்போது எழுப்பாமலிருந்தால் அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

வீட்டுவாடகைக் கட்டுப்பாடு சட்டம்

*69 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வீட்டு வாடகை கட்டுப்பாடு சட்டம் மின் குழுவில் பணிபுரிவோருக்கு விரிவாக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : நம் வாழ்விற்கு ஒளியூட்டக் கூடிய இந்த மின்சார இலாகாவில் பணி புரிவோருக்கு இந்த வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தை விரிவாக்காமல் இருப்பது மாற்றான்தாய் மனப்பான்மையாகாதா? அந்த மனப்பான்மையை அகற்றி விட்டு இந்த வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தை அவர்களுக்கும் விரிவாக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : மின்சார இலாகா ஊழியர்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் என்ற பட்டியலில் வராததால், அதுபற்றி இப்போது எதுவும் செய்வதற்கில்லை.

மின்சாரக் கட்டண உயர்வு

*70 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :
திரு. கே. விநாயகம் : } மாண்புமிகு
திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் :
மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ஆம் ஆண்டில் மின்சார கட்டணம் உயர்த்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், எந்தத் தேதி முதல் எந்தெந்த வகைகளில் உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்திற்கு எந்தெந்த அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) மன்றப் பேரவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்த விவர அறிக்கையில் சாதாரண வீட்டுத் தேவைகளுக்காக வேண்டி என்ற தலைப்பில் திங்களொன்றில் முதல் 50 யூனிட்டுக்கு 30-32 காசு என்றும், இரண்டாவது 50 யூனிட்டுக்கு 25-27 காசு என்றும் மூன்றாவதாக அதற்கு மேற்பட்ட அளவிற்கு 22-24 காசு என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வசதி படைத்தவர்கள்தான் அதிகமாக உபயோகப்

---

* 613-614ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது